DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 7 P.W.5 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிமேகலை | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருநத போது கடந்த 21.11.2015 ம் தேதி நான் 16.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்த போது செல்வக்குமார் த/பெ. காளியப்பக்கவுண்டர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 729/2025 ச/பி .303(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து அசலை கனம் நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் கோபால் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.6 என குறியீடு செய்யப்படுகிறது. காவல் உதவி ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார் 6 நாட்கள் காலதாமதாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை ஒரு நாள் காலதாமதாக நீதிமன்றத்திற்கு

அனுப்பப்பட்டது என்றால் சரிதான் வாதி கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்திர்கள் என்றால் சரியல்ல. காலதாமதம் குறித்து விசாரித்து தெரிந்துகொண்டிர்களா என்றால் வாதி அக்கம் பக்கம் தேடிப்பார்த்து விட்டு வந்து புகார் கொடுத்ததால் தாமதம் ஆனது என்று சொன்னார். யார் யாரிடம் கேட்டார் என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் சரிதான். கேட்டு தெரிந்தவர்களை சாட்சியாக வழக்கில் போடடுள்ளிர்கள் என்றால் போட்டுள்ளோம். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.